Registered as a NewsPaper | பக்கங்கள் 4 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 04 | [19-07-1993] | திங்கட்கிழமை | ஓசை 151

## மாட்டிறைச்சியில் நோய்க்கிருமி; அபாயம் குறித்து எச்சரிக்கை

(கொழும்பு)

மாட்டிறைச்சியில் கெடுதியை உண்டாக்கும் வியாதிக்கிருமி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. முறைப்படி கிருமி வைத்திய திணைக்களத்தினால் அனுமதிக்கப் படாத மாட்டிறைச்சியை உணவாகக் கொள்ளவேண்டாம் என்று கொழும்பு மிருக வைத்திய திணைக்களம் அறிவித்துள்ளது. உணவுக்கென்று வெட்டப்பட்ட மாடுகளில் வெள்ளரிக்காய் விதையைவிடச் சிறிய அளவிலான ஒரு வகை வியாதிக் கிருமி இருப்பது பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது. கர்ப்பிணிகள் வியாதிக் கிருமி உள்ள இறைச்சியை உட்கொள்வதன் மூலம் கர்ப்பச்சிதைவு ஏற்பட்டு நியுமோனியா ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### பிரான்சிடமிருந்து சிறிலங்கா

## விரைந்து தாக்கும் படகு கொள்வனவு

### ஆகஸ்டில் வந்துசேரும்

[கொழும்பு]

பிரான்சிடமிருந்து விரைந்து தாக்கும் நான்கு படகுகளை கொள்வனவுசெய்ய சிறிலங்கா அரசு முடிவுசெய்துள்ளது. இப் படகுகளில் இரண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இது தொடர்பாக அண்மையில் பிரான்சு நாட்டுக் கப்பல் கட்டும் நிறுவனமொன்றுடன் கொழும்புக் கம்பனியொன்று செய்து கொண்ட உடன்பாடு ஒன்றையடுத்தே இப் படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

சிறிலங்கா கடற்படை விரைந்து தாக்கும் படகுகள் (எவ் ஏ. சி.) இரண்டை ஆகஸ்ட் மாத இறுதியில் பிரான்சிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

பிரான்சு நாட்டுக் கப்பல் கட்டும் நிறுவனமான சிமொன் மரயினும் கொழும்பு ட்றைடொக கம்பனியும் செய்து கொண்ட உடன்படிக்கை ஒன்றை அடுத்தே இந்தப் படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. கொழும்பு ட்றைடொக் சிறிலங்கா-ஜப்பான் கூட்டு முயற்சியாகும்.

இதே ரகத்தைச் சேர்ந்த மேலும் இரு படகுகளை சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்யஉள்ளது நான்கு எவ். ஏ சி. படகுகளின் பெறுமதி 360 மில்லியன் ரூபா என்று பாதுகாப்பு வட்டார சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொழும்பு ட்றை டொக் இன்னும் பல படகுகளை சிறிலங்கா கடற்படைக்குக் கொள்வனவு செய்யும் பேரத்தில் ஈடுபட்டுள்ள

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாகரைப்பகுதி கிராமத்தில் பொதுமகன் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் ஏழுபிள்ளைகளின் தந்தையாகிய வியாபாரி ஒருவர் கொல்லப்பட்டார். இப்பகுதியில் 5ஆம் வட்டாரத்தில் கடந்த வெள்ளியன்று இச் சம்பவம் இடம் பெற்றது. வாகரையைச் சேர்ந்த சண்முகம் (வயது 44) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவாவார் இவரது உடலை சிறிலங்கா இராணுவத்தினர் எடுத்துச் சென்றுவிட்டனர்.

இதேவேளை வாகரையில் ஆற்றினுள் மீன்பிடித்துச் சீவியம் நடாத்தும் மக்களை மீன்பிடிக்கச் செல்லக்கூடாதென சிறிலங்கா இராணுவத்தினர் தடுத்துவருகின்றனர் இதனால் 'ப்பகுதி மக்கள் தொழிலின்றி அவதியுறுகின்

## பொலநறுவ, மட்டக்களப்பில் 200 தமிழர் கடத்தல்

### கிளாலி – பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### புதன்கிழமை குமணா வரும்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான சுமார் 61 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டாம் கட்ட நிவாரண உணவு முத்திரைகள் "குமண" கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

இக்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் யாழ். குடா நாட்டிற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி பொருள்கள் ஏற்றி முடிந்ததும் அங்கிருந்து புறப்படும். இக்கப்பல் எதிர்வரும் புதன்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

### வீரச்சாவு



கப்டன்
நக்கீரன் (மாமா)
(யாழ்ப்பாணம்)
நேற்றுக்காலை ஏற்பட்

### சாகும்வரை உண்ணாவிரதம்

## தமிழக முதலமைச்சர் நேற்று ஆரம்பித்தார்

### காவிரி நீர் கிடைக்கும்வரை போராட்டம் தொடருமாம்

(சென்னை)

காவிரி நதியிலிருந்து தமிழ் நாட்டிற்கு உறுதியளிக்கப்பட்ட அளவுநீரை திறந்துவிடுமாறுகோரி தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றுக் காலைமுதல் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்.

காலை 9.15 மணிக்குச் சென்னை எம். ஜி ஆர். சமாதிக்கு மலரஞ்சலி செய்துவிட்டு அந்தச் சமாதிக்கு முன்பாக ஜெயலலிதா உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார். இவருடன் அமைச்சர்களும் எம் எல். ஏக்களும் உடனிருந்த போதிலும் அவர்கள் எவரும் உண்ணாவிரதமிருக்கவில்லை.

தமிழகத்திற்கு காவிரி நதியைத் திறந்து விடுமாறு நடுவர் மன்றத் தீர்ப்பு அமுலாக்கப்படாமையையும், இது குறித்து மத்திய அரசு பாராமுகமாக இருப்பதை ஆட்சேபித்துமே வேறு வழியின்றித் தாம் உண்ணாவிரதம் ஆரம்பித்ததாக ஜெயலலிதா கூறினார்.

முதலமைச்சர் ஜெயலலிதா உண்ணாவிரதம் இருக்கும் மேடைக்கு முன்பாக மக்கள் திரண்டு கோஷங்கள் எழுப்பி வருகின்றனர். மக்கள் அமைதி காக்க வேண்டும் என ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெயலலிதா உண்ணா விரதம் இருக்க ஆரம்பித்ததையடுத்து மாநிலத்தின் பலபகுதிகளிலும் அ.தி.மு.க தொண்டர்கள் ரயில் மறியல், பஸ் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இதனால் போக்குவரத்துகளும் பாதிக்கப் பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஜெயலலிதா உண்ணாவிரதம் வாழப்பாடி வரவேற்பு

(சென்னை)

காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக ஜெயலலிதா திடீரென உண்ணா விரதம் இருக்கிறார். ஆயினும் இதை காங்கிரஸ் கட்சி வரவேற்கின்றது என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

ஜெயலலிதா தனது உண்ணா விரதத்தை கைவிட வேண்டுமென சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் கேட்டுக்கொண்டுள்ளார் முன்னறிவிப்பின்றி தொடரப்பட்ட அவசியமற்ற போராட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் விமான நிலைய முகாமில்

# பொலநறுவ, மட்டக்களப்பில் 200 தமிழர் கடத்தல்

(கொழும்பு)

பொலநறுவ, மட்டக்களப்பு எல்லைப் பகுதிகளில் மர்மதிற்கிடமான முறையில் தமிழர்கள் கடத்தப்படுகின்றனர். கடந்த மூன்றுமாத காலப் பகுதிக்குள் 200 பேர் வரை இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர். விசாரணை என்ற போர்வையிலேயே இக் கடத்தல் இடம் பெறுகிறது என்று பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

படித்த அல்லது வசதி படைத்தவர்களே கடத்தபடுகின்றனர் என்றும் இதனால் இப்பகுதியில் உள்ள தமிழ் மக்கள் அச்சமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

டாக்டர்கள், பாடசாலை அதிபர்கள், அரசாங்க உத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

...தென சிறிலங்கா இராணுவத்தினர் தடுத்துவருகின்றனர் இதனால் 'ப்பகுதி மக்கள் தொழிலின்றி அவதியுறுகின்றனர்.

வாகரையைச்சூழவுள்ளபகுதிகளான பாற்சேனை, கதிரவெளி, கோயந்தனாமடு, வம்மிவட்டவான், தட்டுமுனை, புளியங்கண்டலடி, பனிச்சங்கேணி, மாங்கேணி போன்ற கிராமங்களிலும் மேற்படி நிலைமை ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

கப்டன்

## நக்கீரன் (மாமா)

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை ஏற்பட்ட விபத்தொன்றில் கப்டன் நக்கீரன் / மாமா (இராசையா யோகராஜா பயிலிட்டிவடக்கு, தற்போதைய முகவரி நாகர் கோவில் வடக்கு) எனும் போராளி வீரச்சாவடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# ஜேர்மன் விமான நிலைய முகாமில் அகதிகள் 4 நாள் உண்ணாவிரதம்

(பொன்)

ஜேர்மனியில் அகதிகள் சட்டம் கடுமையாக்கப்பட்டதை தொடர்ந்து விமானம் மூலம் அங்கு வந்து சேரும் அகதிகளை வெளியேற்ற விமான நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் அகதிகள் மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதை ஆட்சேபித்து விமான நிலைய முகாம்களில் உள்ள அகதிகள் கடந்த வாரம் நான்கு நாள் உண்ணா விரதம் இருந்தனர்.


முன்பு அகதிகள் அந்தஸ்து கோருபவர்கள் நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்டு அவர்களின் நிலைபற்றி தீர்மானிக்கப்படும் வரை வசிப்பிடம், உணவு ஆகியவை அளிக்கப்பட்டன. ஆனால் புதிய சட்டப்படி அகதிகள் உடனடியாகவே அவர்கள் வந்த விமானத்தில் திருப்பி அனுப்பி வைக்கப்பட முடியும்.

மட்டக்களப்பு மாவட்டம்

## மினுமினுத்த வெளி பகுதியில் இரு போராளிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மினுமினுத்த வெளியென்ற இடத்தில் விடுதலைப் புலிகள் சென்று கொண்டிருந்த போது அங்கு மறைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினரைக் கண்டு அவர்கள் மீது தாக்குதல் நடாத்தினர். இச் சம்பவம் கடந்த 10ஆம் திகதி பிற்பகல் 6.30 மணியளவில் இடம்பெற்றது. அப்போது ஏற்பட்ட மோத



கப்டன் உதயபாலன்

...லில் இராணுவத்தினர் தரப்பில் ஏற்பட்ட சேத விபரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வெடிகுண்டு குழு கொழும்பில் ஊடுருவலாம்

## பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதம மந்திரி, பாதுகாப்புப் படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் பிரமுகர்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது, ஏழு பேர் அடங்கிய விடுதலைப் புலிகள் வெடி குண்டுக் குழு ஒன்று கொழும்பு நகரினுள் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்த புலனாய்வு அறிக்கையைத் தொடர்ந்தே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏழு பேரைக் கொண்ட குழுவில் ஒருவரான செல்வம் என்பவர் கொட்டாஞ்சேனையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகளைக் கொலை செய்யவும், சிறிலங்கா - இந்தியா கிறிக்கெட் சுற்றுப் போட்டியைக் குழப்பும் நோக்கத்துடன் இந்த வெடிகுண்டு குழு கொழும்பு வந்திருப்பதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாட்டுக் கிரிக்கெட் குழுக்கள் கொழும்பு வரும் போது கிரிக்கட் ஆட்டத்தைக் குழப்புவது புலிகளின் வழக்கம் எனவும் கூறப்படுகிறது. நியூசிலாந்து கிரிக்கட் குழு வந்த சமயம் முன்னாள் கடற்படைத் தளபதி கிளான்சி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வயல்வெளியூடாகவே அனுமதி

(வவுனியா)

நொச்சிமோட்டைப் பகுதி வயல் வெளிகளினூடாகவே நேற்று இரண்டாவது நாளாகவும் மக்கள் பயணம் செய்ய படையினர் அனுமதித்ததாக அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கின்றது

வடபகுதி மக்கள் வவுனியா செல்வதற்காக நொச்சி மோட்டை சிறிலங்கா இராணுவ சோதனை முகாம் பகுதிக்கு சென்றனர். இவர்களை இராணுவத்தினர் நொச்சி மோட்டை பாடசாலைக்கு முன்னால் உள்ள வயல்வெளியினூடாகவே செல்ல அனுமதித்தனர்.

கட்சி மாறல் சட்டம்

## புதிய சட்ட திருத்தம் வர்த்தமானியில் வெளிவரும்

அரசியலமைப்புச் சட்டத்தின் 17ஆவது திருத்தச் சட்ட நகல் விரைவில் வர்த்தமானி மூலம் வெளியிடப்படும். இதன் பின்னர் இருவாரங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்ணான்டோவின் தனிநபர்பிரேரணையாக இதனை சபையில் சமர்ப்பித்திருந்தார். சட்ட திருத்தம் தொடர்பாக அரசியலமைப்புச் சட்ட அமைச்சர் திரு. கே. என் சொக்ஸியும் இதற்கு திருத்தங்களை கொண்டு வர உத்தேசித்துள்ளார் என்றும் இது தொடர்பாக சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் பிரச்சினைகளை தீர்க்கவே நீதிமன்றங்கள்

## தமிழீழ நீதிமன்றம் குறித்து கரிகாலன்

(யாழ்ப்பாணம்)

''எமதுபோராட்டம் முனைப்படைந்த காலத்தில் இருந்து சிங்கள சிறிலங்கா அரசினது சிவில் நிர்வாகம் செயலிழந்து மக்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இணக்க சபைகளை, ஆரம்ப நீதிமன்றங்களை ஆரம்பித்த நாம் முதற்படியாகத் தமிழீழத்திற்கான நீதிமன்றங்களை உருவாக்கமுற்பட்டுள்ளோம். இது முழுமை பெறுவதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்''.

இவ்வாறு நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சட்ட அறிஞர்களுக்கான கலந்துரையாடலில் தமிழீழ அரசியற்றுறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் ஒரு பொலிஸ் பலி

(வவுனியா)

மாமடுவ பகுதி சிறிலங்கா இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸ் ஒருவர் பலியானார்,

கடந்த 10 ஆம் திகதி மாமடுவ பகுதி மணல் வீதியில் அமைந்திருந்த காவலரணில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீதே புலிகள் தாக்குதல் நடத்தினர்.

புலிகள் நடத்திய இச்சிறைப்பர் தாக்குதலினால் தஸநாயக்க என்ற றிசேர்வ் பொலிஸ் பலியானார்.

## புலிகளுடன் குலவவேண்டாம் கொழும்பில் சுவரொட்டி

(கொழும்பு)

''விடுதலைப்புலிகளுடன் இனியும் கூடிக் குலவவேண்டாம். எமது பாதுகாப்புப் படையினரின் உயிர்களை பறிகொடுக்காதீர்கள்.'' இவ்வாறு கோரும் சுவரொட்டிகள் கொழும்பில் புறக் கோட்டை, கோட்டைப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன சிங்கள மொழியில் கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகளாக இவை பெரிய எழுத்துக்களுடன் காணப் படுகின்றன. கோட்டை, புறக்கோட்டைப் பகுதியில் பலர் கூடி இந்த சுவரொட்டிகளை வாசிப்பதை அவதானிக்க முடிகிறது.

## வரி விளம்பரம்

### சுவிற்சர்லாந்தில் கண்காட்சி

பழமை வாய்ந்த Wyler Invicta West-end Damas Rolex போன்ற தங்க நிறக் கடிகாரங்கள் சுவிற்சர்லாந்தில் கண்காட்சிக்கு அனுப்புவதற்காக நியாயமான விலைக்கு எம்மால் வாங்கப்படும். (பழுதடைந்த நிலையிலுள்ள கடிகாரங்களானாலும் சரி) டிஸ்கா வாச் அண்ட் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி/7032)

### முதலாம்பிள்ளை

இன்று தமிழில் வானொலி நாடகம் எழுதுபவர்களில் தலைசிறந்தவர் என்று, விமர்சகர் K. S சிவகுமாரனால் பாராட்டப்பட்ட அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/- ஒரேயொரு வானொலி நாடகநூல். (4095)

### இரு முகாம்கள் மூடப்படும்?

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இரு விசேட அதிரடிப்படை முகாம்களை மூடிவிட மேல் மட்டத்தில் ஆராயப் படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன பெரிய நீலாவணை கல்முனை வாடிவீடு ஆகிய இடங்களில் உள்ள அதிரடிப்படை முகாம்களை மூடிவிடுவது குறித்தே ஆராயப் படுகின்றது

இதே சமயம் இப் பகுதியில் பதிலுக்கு பொலிஸ் நிலையங்களை திறக்க ஆலோசிக்கப்படுகிறதாம்.

### தற்கொலை

தாயுடன் ஏற்பட்ட தகராறினால் மனமுடைந்த பெண் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார். ஏழாலைவடக்கைச்சேர்ந்த சண்முகநாதன் சுதா (வயது16) என்பவரே இவ்வாறு நஞ்சருந்திய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் மரணமானார்.

### பேசாலைக்கு நீந்தி வந்தனர்

(மன்னார்)

பேசாலைக் கடலில் மீன்பிடிப் படகு ஒன்று நீரில் மூழ்கியதால் அதிலிருந்த நான்கு இந்திய மீனவர்கள் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

தலைமன்னார்பொலிசாரின் பாதுகாப்பில் இருக்கும் இவர்களைக் கொழும்புக்கு அனுப்பி

# மாநில பொலிசார் முறைப்பாட்டை அரசு மறைத்தது ஏன்?

## ராஜீவ்கொலைவழக்கில்சட்டத்தரணிகேள்வி

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலையில் சிவராசனையும், புலிகள் இயக்கத்தையும் இணைத்ததன் மூலமாக அரச தரப்பினர் சதியின் நோக்கம் பற்றிய நிலவரங்களைக் குழப்பியடிக்கின்றார்கள். இவ்வாறு முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எதிரிகள் தரப்பில் ஆஜராகும் இன்னொரு வழக்கறிஞரான என். சந்திரசேகர் தெரிவித்தார்.

சென்னை புறநகர்ப் பகுதியில் உள்ள பூந்தமல்லி விசேட நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி எஸ் எம் சித்தீக் முன்னிலையில வெள்ளியன்று தனது வாதத்தை சந்திரசேகர் தொடர்ந்து நிகழ்த்துகையில் கூறியதாவது,

இந்தியாவிற்கு பலதடவைகள் வந்துபோன புலிகள் இயக்கப் புலனாய்வுப் பிரிவின் உறுப்பினரான சிவராசன், வரதராஜப்பெருமாளை கொலை செய்யும் நோக்குடன் 1991 ஏப்ரல் 30இல் தமிழ் நாட்டுக்கு வந்திருப்பதாக மாநில பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு (சி. ஐ. டி.) முறைப்பாடொன்று கிடைத்திருந்தது. வரதராஜப் பெருமாள் அப்போது மத்திய அரசாங்கத்தினால் போபாலில் கடும் பாதுகாப்புடன் கூடிய வீடொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

ராஜீவ் காந்தி கொலையில் சிவராசனையும் புலிகள் இயக்கத்தையும் இணைத்ததன் மூலமாக அரச தரப்பினர் சதியின் நோக்கங்கள் பற்றிய நிலைவரங்களை குழப்பியடித்திருக்கிறார்கள். அத்துடன் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையும் வேண்டும் என்றே மறைத்திருக்கிறார்கள் (இந்த முறைப்பாட்டை யார் தெரிவித்தார்கள் என்பதை சந்திரசேகர் கூறவில்லை.)

ராஜீவ்காந்தி கொலை செய்யப்படுவதற்கு 5 நாள் முன்னதாக அதாவது 1991 மே 17 இல் வரதராஜப் பெருமாளை கொலை செய்வதற்கு ஏதுவான திட்டங்களை தயார்படுத்துவதற்காக சங்கர் எனும் கோணேஸ்வரன் என்ற புலிகள் இயக்க உறுப்பினரை சிவராசன் பணித்திருந்தார். சங்கரிடமிருந்து தஞ்சாவூர் மாவட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டரினால் பெறப்பட்ட தகவல்கள் இதனைக் காண்பிக்கிறது.

(ராஜீவ் காந்தி கொலை செய்யபபட்ட பின்னர் முதன் முதலாகக் கைதுசெய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் சங்கரே. இவரும் ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார். 1991 ஜூன் 7-ல் திருத்துறைப்பூண்டியில் கைதான சங்கர் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே ராஜீவ் கொலை தொடர்பாக பலரைப் பொலிசார் கைதுசெய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.)

இக்கொலை வழக்கிலே புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிராகக் குற்றத்தைச சுமத்திய அரசு தரப்பினர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டனர். இலங்கையில் இந்திய அமைதி காக்கும்படை நடவடிக்கையை மேற்கொண்டிருந்த காலத்தில் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ தகவல் ஒன்றின்படி, பிரபாகரன் தனக்கு அடுத்தபடியாக இயக்கத்தில் முன்னணியிலிருந்த மாத்தையாவுடனான துப்பாக்கிச் சமர் ஒன்றின்போது கொல்லப்பட்டுவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கைக் கொள்கை காரணமாக அவரை ஒரு எதிரியென (அத்திகதிக்கு முன்னர்) புலிகள் கருதியிருக்கலாம். ஆனால் அவரைக் கொலை செய்வதென்ற கேள்வி அப்போது எழவில்லை. நிச்சயமாக புலிகள் 5 வருடங்களாக சதி செய்து கொண்டிருக்க முடியாது.

இந்தியத் தமிழரான இரும்பொறைக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் பெரியசாந்தனினால் எழுதப்பட்ட இரு கடிதங்களும் நம்பகமானவை என்பது கேள்விக்குரியது. ராஜீவ் கொலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென தமிழ் நாட்டின் கோடியாக் கரையில்1991 ஏப்ரல் 30இல் சங்கர், முருகன், ரொபர்ட்பாயஸ் மற்றும் சின்னச்சாந்தன் ஆகியோர் இரகசியமாக வந்து சேர்ந்தது பற்றி பிரபாகரனுக்கு எழுதப்பட்ட கடிதத்தில தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிவராசனுடனும் ஏனையோருடனும் பாயஸ் வந்ததாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதேவேளை பாயஸ் ஒரு அகதியாக 1990 செப்டெம்பரில் இராமேஸ்வரம் வந்ததாக அரச தரப்பினர் கூறிபிருக்கின்றனர். இக்கூற்று கடிதத்தைப் பொய்யாக்குகிறது இதில் எது சரியென்பதை அரசுதரப்பு தெளிவுபடுத்த வேண்டும்.

ராஜீவ் கொலை செய்யப்பட்ட மூன்று நாட்களின் பின்னர் அதாவது 1991 மே 24 இல் சங்கர் கைது செய்யப்பட்டது தொடர்பாக பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன. ஆனால் அவர் 1991 ஜூன் 7இல் கைதானதாகவே விசேட விசாரணைக்குழுபதிவு செய்திருக்கிறது. சங்கரின் கைது தொடர்பான சர்ச்சை தெளிவானது. வழக்கில் சந்தேக நபர்களின் எண்ணிக்கையை கூட்டுவதற்காகவே சங்கரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

சங்கரிடமிருந்து ஏன் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை. விசேட விசாரணைக் குழுவினர் அவரிடமிருந்து வாககுமூலத்தை பெறவிலலை என்பதுதெளிவானது. ஆனால் அதற்குப் பதிலாக சங்கரைக் கைது செய்த இன்ஸ்பெக்டர் நடத்திய விசாரணைகளின்

உ

ஸ்ரீராம ஜெயம்

## 2-ம் ஆண்டு நெஞ்சுருகல்



கட்டைக்காட்டில் இறங்க வந்த இராணுவத்துடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

## 2-ம் லெப். சிறிபதி

(சற்குணநேசன் வைகுந்தவேள்)

தாயின் மடியில்: 11 12 1973

தமிழீழத் தாயின் காலடியில்: 19-07-1991

திதி: 19-7-1993

வீரம் விளைத்து விண் உரிமை கொண்டவேந்தே பாரில் உனைப் பிரிந்து பரிதவிக்கும் ஆண்டு இரண்டு அன்பின் திருவடிவே ஆருயிரே அரும்பேறே வைகுந்தா அண்ணன் பதமலரை காதலித்து சென்றாயா?

## நினைவு கூருகின்றோம்... 1993-07-19

1986ஆம் ஆண்டு இதே தினம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**சதாசிவம் சண்முகராசா** (சம்மாந்துறை - அம்பாறை)

**ஆ. தெய்வேந்திரம்** (சம்மாந்துறை - அம்பாறை)

1987ஆம் ஆண்டு வவுனியா - தம்பனையில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

**விஜி** (யோசப் சத்தியநாதன் - பாசிமோட்டை, வட்டக்கண்டல் - மன்னார்)

வவுனியா - அடம்பன் குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**மதி** (இராசதுரை ஜெயபாலன் - 496- 4-ம்படிவம், பாவற்குளம் - வவுனியா)

திருமலை - பன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது சுட்டுக்கொன்று, மரத்தில் தொங்கவிடப்பட்டு எரிக்கப்பட்ட மூன்று வயதுக்குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு அம்பாறை – காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**தாடி** (பொன்னம்பலம் நாதன் - காரைதீவு - 03- அம்பாறை)

மட்டு - கிருமிச்சைப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய-

**லெப் கைலன்** (வடிவேல் சண்முகநாதன் - கிரான் - மட்டு)

1989 ஆம் ஆண்டு யாழ் - திருநெல்வேலியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பாரதிபுரத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்டு மானிப்பாய் வங்கிக்கு முன்பாக சடலமாக மீட்கப்பட்ட உடுவில் மல்வத்தைச் சேர்ந்த தமிழிளைஞன். துன்னாலை கோவிற்கடவைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண். கரவெட்டி அரசடிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இராசகிராமத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு ஆனையிறவு - குறிஞ்சாத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**டெஸ்மன்** (கணபதிப்பிள்ளை தணிகாசலம் - 7-ம்வட்டாரம், மூதூர் - திருமலை)

**லெப். சௌந்தலன்** (சின்னையா நாகராசா - 95, 2-ம் படிவம் - தர்மபுரம்)

**கீர்த்தீ** (பசுபதி சிறிதரன் - திருவையாறு – கிளிநொச்சி)

**மேகன்/தம்பி** (சண்முகம் மனோகரன் - 167/ ஏ குமரபுரம் - பரந்தன் - கிளிநொச்சி)

இதே பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

**லெப். துஷ்யந்தன்** (சிவயோகநாதன் பார்த்தீபன்- தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை)

பரந்தனில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**குகன்** (சுப்பையா செல்வேஸ்வரன் - கரவெட்டித்திடல் - புளியம்பொக்கணை)

மட்டு - மணற்பிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய -

**சிவபாரதி** (வேல்முருகு நாகராசா - மகிழவெட்டுவான் - மட்டு)

மட்டு - திருப்பழுகாமம் - கோவில் போரதீவு, பெரிய போரதீவு, வெல்லாவெளி கற்சேனை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு பின்னர் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட 35 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆ.க.வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

தாயுடன் ஏற்பட்ட தகராறினால் மனமுடைந்த பெண் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார். ஏழாலைவடக்கைச்சேர்ந்த சண்முகநாதன் சுதா (வயது16) என்பவரே இவ்வாறு நஞ்சருந்திய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரும் வழியில் மரணமானார்.

## பேசாலைக்கு நீந்தி வந்தனர்

(மன்னார்)

பேசாலைக் கடலில் மீன்பிடிப் படகு ஒன்று நீரில் மூழ்கியதால் அதிலிருந்த நான்கு இந்திய மீனவர்கள் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

தலைமன்னார்பொலிசரின் பாதுகாப்பில் இருக்கும் இவர்களைக் கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## கொழும்பில் சவூதி தூதரகம்

சவூதி அரேபியாவின் தூதரகம் விரைவில் கொழும்பில் திறக்கப்படவுள்ளது. சவூதி அரேபியாவின் வெளிநாட்டு அமைச்சர் சவூத் அல்பைசல் இது தொடர்பான கடிதமொன்றை அமைச்சர் அஸ்வருக்கு எழுதியுள்ளார். அக்கடிதத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் தொடர்பாகவும் இஸ்லாமிய மற்றும் அரபுலக பிரச்சினைகள் தொடர்பாகவும் சிறிலங்கா அரசு கடைப்பிடிக்கும் கொள்கைகளை வரவேற்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரொனி நாடு திரும்பினார்


(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ஆட்சியில் புதிய சகாப்தம் உதயமாகிறது, இவ்வாறு கடந்த புதனன்று காலை கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திறங்கிய முன்னாள் நிதியமைச்சர் ரொனி டிமெல் விமான நிலையத்தில்வைத்து தெரிவித்தார்

தமது மனைவியுடன் எமிரேட் விமானசேவை விமானத்தில் லண்டனிலிருந்து வந்து சேர்ந்தார். தற்போது மீண்டும் கொழும்பு திரும்பியுள்ள ரொனி டிமெல்லுக்கு ஜனாதிபதி விஜேதுங்கவின் கீழுள்ள நிதியமைச்சு பொறுப்பு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதேசமயம்முன்னாள் ஜனாதிபதியுடன் கருத்துவேறுபட்டு கட்சியை விட்டு வெளியேறிய அனைவரையும் ஐ. தே. கவில் மீண்டும் இணைக்கும் முயற்சிகள் நடைபெறுவதாககொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

---



கட்டைக்காட்டில் இறங்க வந்த இராணுவத்துடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

## 2-ம் லெப். சிறிபதி

(சற்குணநேசன் வைகுந்தவேள்)

| தாயின் மடியில்: | தமிழீழத் தாயின் காலடியில்: |
|---|---|
| 11 12 1973 | 19-07-1991 |

**திதி: 19-7-1993**

வீரம் விளைத்து விண் உரிமை கொண்டவேந்தே
பாரில் உனைப் பிரிந்து பரிதவிக்கும் ஆண்டு இரண்டு
அன்பின் திருவடிவே ஆருயிரே அரும்பேறே வைகுந்தா
அண்ணன் பதமலரை காதலித்து சென்றாயா?

"வைகுந்தவேள்" வீதி,
கற்கோவளம். [5414] - குடும்பத்தினர்

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 20 - 4 - 1971 | 11 - 07 - 1991 |



## 2-ம் லெப். ஜனகா

(செந்திவேல் சுகந்தி)

**திதி - 19-7-1993**

அன்னியபடைகளின் சீற்றம் கண்டு
அண்ணனின் அணியில் சேர்ந்து நின்று
பொங்கிடும் அலை என ஆர்ப்பரித்தாய்
எங்குமே போர் எங்களின் தேசம்
எம்மண்ணில் அன்னிய முகாமா என
புயலாகி புறப்பட்டு போனவளே
புது வரலாறு எழுதிப்போய் விட்டாய்
ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறாது எம்துயர்

19-7-93 இன்று நடைபெறும் நிகழ்வில் உறவினர்கள் சக போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(5408)

---

தொடர்பாக பலரைப் பொலிசார் கைதுசெய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.)

இக்கொலை வழக்கிலே புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு எதிராகக் குற்றத்தைச் சுமத்திய அரசு தரப்பினர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டனர். இலங்கையில் இந்திய அமைதி காக்கும்படை நடவடிக்கையை மேற்கொண்டிருந்த காலத்தில் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ தகவல் ஒன்றின்படி, பிரபாகரன் தனக்கு அடுத்தபடியாக இயக்கத்தில் முன்னணியிலிருந்த மாத்தையாவுடனான துப்பாக்கிச் சமர் ஒன்றின்போது கொல்லப்பட்டுவிட்டார் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

இச்செய்தி பத்திரிகையில் பரவலாக வெளிவந்தது. இச்செய்தியை இந்திய அரசாங்கமோ அல்லது இந்திய மத்திய புலனாய்வுப் பணியகத்தின் (சி. பி. ஐ) விசேட விசாரணைக் குழுவினரோ இதுகாலவரை மறுதளிக்கவில்லை.

விசேட விசாரணைக் குழுவின் அதிகாரிகள் விசாரணைக்கென இலங்கை சென்றார்கள். ஆனால், பிரபாகரனின் பிறப்புச் சாட்சிப் பத்திரத்துடன் மாத்திரமே அவர்கள் இந்தியா திரும்பினர். பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பதற்கு அரசு தரப்பினர் அந்தப் பிறப்புச் சாட்சிப்பத்திரத்தை தவிர வேறு எதையும் சான்றாக முன்வைக்கவில்லை. 'உயிரற்ற' இந்த வழக்கில் ஒரு 'துடிப்பை' ஏற்படுத்துவதற்காகவே பிரபாகரனின் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது,

ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கான சதித் திட்டத்தின் நேரம் பற்றிய அரசு தரப்பினரின் வாதங்கள் புரிய முடியாதவையாகவும், சந்தேகத்திற்கிடமானவையாகவும் இருக்கின்றன. ராஜீவ் காந்தியைக் கொலைசெய்வதற்கான சதியை 1987 க்கும் 1991க்கு மிடையிலேயே புலிகள் இயக்கத்தினர் தீட்டியதாகவும், ராஜீவ் காந்தி மீண்டும் அதிகாரத்திற்கு வந்துவிடுவார் என்று புலிகள் அஞ்சியதாலேயே இக்கொலையை செய்ய நோக்கம் கொண்டதாகவும் அரசு தரப்பினர் கூறியிருக்கின்றனர்.

1991 மார்ச் 15இல் மாத்திரமே ராஜீவ்காந்தி மீண்டும் பதவிக்கு வருவது சாத்தியம் என்பது ஊர்ஜிதமானது. அந்தத் திகதிக்குப் பின்னர்தான் சதித்திட்டம் ஆரம்பித்திருக்க வேண்டும் அதற்கு முன்னதாக ஆரம்பித்திருக்க முடியாது. ராஜீவ்காந்தியின் இலங்

னர் அதாவது 1991 மே 24 இல் சங்கர் கைது செய்யப்பட்டது தொடர்பாக பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன. ஆனால் அவர் 1991 ஜூலை 7இல் கைதானதாகவே விசேட விசாரணைக்குழுபதிவு செய்திருக்கிறது. சங்கரின் கைது தொடர்பான சர்ச்சை தெளிவானது. வழக்கில் சந்தேக நபர்களின் எண்ணிக்கையை கூட்டுவதற்காகவேசங்கரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

சங்கரிடமிருந்து ஏன் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை. விசேட விசாரணைக் குழுவினர் அவரிடமிருந்து வாக்குமூலத்தை பெறவில்லை என்பதுதெளிவானது. ஆனால் அதற்குப் பதிலாக சங்கரைக் கைது செய்த இன்ஸ்பெக்டர் நடத்திய விசாரணைகளின் விபரங்களை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

இக்கட்டத்தில் குறுக்கிட்ட நீதிபதி முன்னர் ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றமைக்காக விசேட விசாரணைக்குழு மீது எதிரிகள் தரப்பினால் குற்றஞ்சுமத்தப்பட்டது இப்போது ஒப்புதல் வாக்குமூலத்தை பெறவில்லையென்பதற்காக குற்றஞ்சாட்டப்படுகிறதே என்றார் அப்போது நீதிமன்றத்தில் இருந்த எதிரிகளும் வழக்கறிஞர்களும் பலமாகச் சிரித்தனர்.

சந்திரசேகர் தொடர்ந்தும் தமது வாதத்தை நிகழ்த்துகையில் கூறியதாவது:

சிவராசன், தனு மற்றும் ஏனையோருடன் 1991 ஏப்ரல் 30இலேயே சங்கர் வந்தார். பின்னர் போபால் சென்று வர தர ஜப்பெருமாளை கொலை செய்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்குமாறு சிவராசனினால் சங்கருக்கு பணிக்கப்பட்டது. ராஜீவ் கொலையில் சங்கர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதற்கு எந்தவொரு சான்றையும் அரசு தரப்பினர் முன்வைக்கவில்லை. கொலை இடம்பெற்ற மறுதினம் சங்கர் சென்னையில் ஒரு லொட்ஜில் தங்கியிருந்தார்.

இலங்கைத் தமிழர்கள் இருக்கும் இடங்களைப் பொலிஸார் தேடுகிறார்கள். எனவே அங்கிருந்து வெளியேறி விடுமாறு அந்த லொட்ஜ் உரிமையாளர் கேட்கவே சங்கர் தஞ்சாவூருக்கு கிளம்பினார்.

சதித்திட்டம் ஒன்றைப் பொறுத்தவரை அதன் செயலாக்கத்தில் சம்பந்தப்பட்ட சகலருக்கும் சதிபற்றித் தெரிந்திருக்க வேண்டும். ஒரு மனதான நோக்கம் இருந்திருக்க வேண்டும். இதைஇந்திய பீனல் சட்டத்தின் 120 ஏபிரிவுவலியுறுத்துகிறது என்றும் தெரிவித்தார். (இந்து)

---

**மோகன்/தம்பி** (சண்முகம் மனோகரன் - 167/ ஏ குமரபுரம் - பரந்தன் - கிளிநொச்சி)

இதே பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய-

**லெப். துஷ்யந்தன்** (சிவயோகநாதன் பார்த்தீபன்- தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை)

பரந்தனில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**குகன்** (சுப்பையா செல்வேஸ்வரன் - கரவெட்டித்திடல் - புளியம்பொக்கணை)

மட்டு - மணற்பிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய -

**சிவபாரதி** (வேல்முருகு நாகராசா - மகிழவெட்டுவான் - மட்டு)

மட்டு - திருப்பழுகாமம் - கோவில் போரதீவு, பெரிய போரதீவு, வெல்லாவெளி கற்சேனை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு பின்னர் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட 35 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆ.க.வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

**லெப். றொபின்சன்** (திருமேனிப்பிள்ளை கிருபாகரன்-அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை-மட்டு)

**பாபு** (அந்தோனி நிக்கலஸ் - கோரக்கல்லிமடு, கிரான் - மட்டு)

**2-ம் லெப். விக்ரம்** (அருளானந்தம் சுந்தரராஜா - விசுவமடு - முல்லைத்தீவு)

**நீதி** (சோமநாதன் நித்தியானந்தமூர்த்தி - 107, ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

**குணராஜ்** (அமுதலிங்கம் குமார் - தர்மபுரம்-கிளிநொச்சி)

**லெப். ராஜேந்தர்** [பொன்னுத்துரை லோகேஸ்வரன் - அடம்பன் - மன்னார்]

**கப்டன் விஜிதா விஜி** [சிவாஜினி சின்னப்பு - செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்]

**லெப். பசுபதி** [இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன்-மறவன் புலவு, சாவகச்சேரி - யாழ்]

**2 ம் லெப். சிறிபதி** [சற்குணநேசன் வைகுந்தவேள் கற்கோவளம் - பருத்தித்துறை]

**அசோக்** [தெய்வேந்திரன் ரவீந்திரன் - தும்பளை கிழக்கு, பருத்தித்துறை - யாழ்]

**சிதம்பரநாதன்/நாதன்** [தம்பு ஆனந்தராசா - கோயிலாக்கண்டி, கைதடி - யாழ்]

**குருபரன்** [இராசையா சந்திரசேகரம் - எழுதுமட்டுவாள், கொடிகாமம் - யாழ்]

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**தினேஷ்** [வேதநாயகம் திவாகரன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி]

வவுனியா - பேயாடி கூழாங்குளம் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிசூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

யாழ் - அச்சுவேலிப் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட தந்தை, மகன் ஆகிய 02 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-7030)

சிந்தனைக்கு

காலத்தால் கனிந்து விட்ட கருத்தின் வலிமைக்கு எந்தச் சேனையும் ஈடுகொடுக்க முடியாது.
— விக்டர் ஹ்யூகோ.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 19-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## இரு தேசங்கள் இரு இராணுவம்

இலங்கைத்தீவில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால், முதலில் இரு இனங்களின் தாயகம் அங்குள்ளதென்பதை சிங்களப் பேரினவாதிகள் ஏற்றுக் கொள்ளவேண்டும். அத்தோடு, தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தர்க்க பூர்வமான வளர்ச்சி நிலையையும் மதிப்பீடு செய்ய வேண்டும். அப்பொழுதே இலங்கைத்தீவில் சமாதானத்திற்கான அடிப்படையை உருவாக்க முடியும்.

இவ்விடயத்தை லண்டனில் வசிக்கும் சிங்களவரான பேராசிரியர் அற்றியன் விஜயமான சரியாகக் கணிப்பீடு செய்துள்ளார். "இலங்கைத் தீவில் இருப்பவை சொந்தமாக ஒவ்வொரு இராணுவத்தைக் கொண்ட இருநாடுகளாகும். இந்த சாதாரண-தெளிவான உண்மையை அங்கீகரிப்பதே சமாதானத்திற்கான அடிப்படையாகும்." பேராசிரியரின் இக்கருத்தானது சிங்களப் பேரினவாதிகளுக்கு ஆத்திரத்தையும் ஏற்படுத்தலாம். "சாத்தானின் வேதங்கள்" என்னும் நூலை எழுதிய இஸ்லாமியரான 'சல்மான் ருஷ்டி'க்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மரண தண்டனை அறிவித்தது போன்று, பௌத்த பேரினவாதிகள் பேராசிரியரைத் 'துரோகி' எனவும் குற்றம் சாட்டலாம்.

ஆனால், பேராசிரியர் கூறியவை ஒரு சாதாரண, தெளிவான உண்மை, யதார்த்த நிலை, இலங்கைத்தீவில், இன்று இருவேறு பரிபாலனங்கள் நடைபெறுகின்றன. சிங்கள இராணுவம், தமிழர் இராணுவம் என இரு இராணுவங்களும் உள்ளன. இதன் அடிப்படையில், எவரும் இலங்கைத் தீவில் இரு தேசங்கள் இருப்பதென்பதைத் தர்க்க பூர்வமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் ஓர் இனத்தின் தாயகத்தின் ஒரு பகுதியை, அதாவது ஒரு தேசத்தின் ஒரு பகுதியை மற்றைய தேசத்தின் இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. ஆனால் அதை மீட்டெடுப்பதற்காக ஒரு தேசத்தின் இராணுவம் சிறியதாக இருப்பினும் ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் போரிடுகின்றது. ஆனால், ஒரு நாட்டின் இராணுவம் மற்றைய தேசத்தை ஆக்கிரமிப்பதென்பதும், அதை மீட்டு தமது சுதந்திர தேசத்தை நிறுவ மக்கள் போராடுவதும், மீட்டெடுப்பதும் வரலாறு கண்ட உண்மை.

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகள் வெற்றி நிச்சயம்!

இருபதாம் நூற்றாண்டின் வரலாறு முழுவதிலும் தேசிய அபிலாசைகளை முன்வைத்து நடைபெற்ற போராட்டங்கள் அனைத்தும் தேசிய இனங்கள் தனி அரசு அமைப்பதில்தான் முடிவுற்றிருப்பதற்கு பல உதாரணங்களை கொண்டிருக்கிறது. [இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1946ஆம் ஆண்டில் நான் சரித்திரப்பாடத்தில் பட்டம் பெற்றிருக்கிறேன் ] இந்த ஒவ்வொரு போராட்டத்திலும் அந்நிய ஆட்சியாளரை விலக்கி சொந்த அரசுகளை அமைத்துக் கொள்வதே நோக்கமாக இருந்துள்ளது.

உலக சரித்திரத்தின் எந்த இடத்திலும் இத்தகைய போராட்டங்களில் கெரில்லாக் குழுவினரின் அபிலாசைகள் நிறைவேற்றப்படாமல் போனமைக்கு ஒரு சிறிய உதாரணத்தைத்தானும் காணமுடியாது.

தனி அரசுக்கான விருப்பம் நிறைவேற்றப்படாமல் இருக்கும் எல்லா இடங்களிலும் இன்னமும் காலவரையறையற்ற வகையில் போராட்டம் நீடிப்பதைக் காணலாம். இத்தகைய சிலபோராட்டங்கள் மிகநீண்டகாலம் நீடிப்பதும் தெரிந்ததே. இசுரேலிய இராணுவத்திற்கு எதிராக பாலத்தீனியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் நடத்திவரும் "இன்டிபடா" பெரும் அதிர்வு அலைகளை எழுப்பிவருவது இங்கு குறிப்பிடக் கூடியதே. இதுமாதிரியான எந்த ஒரு போராட்டத்திலும் கெரில்லாக்குழுவினரின் அபிலாசை நிறைவேற்றப்படாமல் சமாதானம் பேணப்பட்டதாக இல்லை. இதனைக் கருத்திற்கு எடுக்காமல் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் பிரயோகிப்பதன் மூலம் வெற்றிகொள்ளலாம் என்று சிங்கள மக்களுக்கிடையே பத்திரிகைகளும் அரசியல் வாதிகள் சிலரும் பிரசாரம் செய்வது வேடிக்கையானதாகும். உலகின் இன்றைய நடப்புகளை உணராத இத்தகைய போக்குகள் நிராகரிக்கப்படவேண்டியவையாகும்.

இத்தகைய போராட்டங்களில் அரசின் ஆணையை அமுல்படுத்த முயலும் மரபு ரீதியான இராணுவம் வெல்ல முடியாது என்பதை சரித்திரம் தெளிவாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் நீண்டகால நோக்கில் அரசு தோல்விகளையே சந்திக்கும். விடுதலைப்புலிகள் இந்தப் போரில் தோற்கப் போவதில்லை. ஏனெனில் சிறிலங்கா இராணுவத்தை எதிர்கொள்ளும் அளவுக்கு அவர்கள் ஆற்றல் கொண்டுள்ளனர் இதே வேளை போர் பல்வேறு வகைகளிலும் பாரிய செலவுகளை ஏற்படுத்தும் ஒரு சுமையாகவிக்கும். இவை ஏற்கனவே ஓரளவுக்கு உணரப்பட்டும் உள்ளது.

சிங்கள மக்களும் அவர்களுடைய அரசும் விரைப்பான இன்றைய நிலைக்கு ஒருமாற்றுக்கான வேண்டும். பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பெரும் செலவு ஏற்படுத்துவதற்கு மிகச் சாதாரணமான இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதே அடிப்படையாக இருக்கும்.

> தற்போது லண்டனில் வாழ்ந்துவரும் அதிரியன் விஜயமான கொழும்பில் இருந்து வெளியிடப்படும் ராவய பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் மொழியாக்கம் இது. இவர் வரலாற்றுத் துறை பட்டதாரியாவார்.

நீண்டகாலம் நீடித்த கெரில்லாப் போராட்டங்கள் ஒவ்வொன்றும் தனியான, சுதந்திரமான, இறைமையுடைய அரசமைப்பு ஒன்றை அமைப்பதன்மூலம் சமாதானம் காணப்பட்டிருந்ததை நாமும் முன்மாதிரியாக எடுக்க முடியும். பண்டைய பகைமைகள் மறைந்து புதிய நட்புக்கள் தோன்றும். ஐரோப்பாவின் சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் அத்திவாரமாக இன்று அமைந்திருப்பது முன்பு பகை நாடுகளாக விளங்கிய ஜேர்மனுக்கும் பிரான்சுக்கும் இடையிலுள்ள நட்புதான்.

இலங்கைத்தீவு மிகவும் சிறிய நாடு என்று மற்றுமொரு புரளிக்கதை கூறப்படுகின்றது. சிறிலங்காவிலிருந்து வடக்கு கிழக்கு பகுதிகளை நீக்கிவிட்டால் சிறிலங்கா சிறியதாகிவிடும் என்பது மடமைத்தனமான ஒரு கருத்தாகும். பிரிட்டிசார் விட்டுச்சென்றபோது இருந்த அந்த நிலையை தொடர்ந்து பேணுவதற்காக ஆயிரக்கணக்கான உயிர்களை பலியிடுவதை விடவும் அது சிறிலங்காவை வளங்குன்றச் செய்துவிடாது. எப்போதும் போல உண்மையைவிட எதுவும் உயர்வானதல்ல. ஈழத்தை தவிர்ந்த சிறிலங்கா சுவிட்சிலாந்திற்கு ஒத்த நிலப்பரப்பை கொண்டிருக்கும். இன்றைய தலாவீத வருமான வளர்ச்சியோடு ஒப்பிடும்போது 2000-ம் ஆண்டில் ஆகக்கூடுதலான தலாவீத வருமானத்தைக் கொண்டிருக்கக் கூடிய சிங்கப்பூரைவிட 75 மடங்கு பெரியதாகும்.

## போராளிகள் தோற்றதாக வரலாறு இல்லை

மாறுகின்றது. இந்த முரண்பாட்டை தொடர்ந்து பேணும் ஆர்வம் பொருளாதார செலவுகளை அதிகரித்துச் செல்வது மட்டுமன்றி அரசியல் அரங்கிலும் பல விளைவுகளை ஏற்படுத்தி முடிவுறாத யுத்தமாக நீண்டுசெல்ல வைக்கின்றது. பெரும் அளவில் இராணுவச் செலவீடு அதிகரித்துச் செல்வதும், இராணுவம் பலமடைந்து வருவதும், சிங்கள மக்களுக்கு இடையே கூட அரசின் சிவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுவதில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும். இதே அளவுக்கு ஆயுதங்களின் பாவனை அதிகரித்து வருவது சாதாரண மக்கள் மத்தியில் தவிர்க்கமுடியாத வகையில் சங்கடங்களை தோற்றுவிட்டையும் சுமையையும் தருகின்ற இந்தப் போரைத் தொடர்ந்து நடாத்துவதா என்பது ஒரு புறம். பிரிவினையுடன்கூடிய சமாதானத்தைப் பெறுவது மறுபுறம். இவற்றில் எதனைத் தேர்ந்தெடுப்பது? இவற்றிற்கு இடையில் மாற்று எதுவும் இருப்பதாக இல்லை. விடுதலைப்புலிகள் என்னும் இராணுவ அணி சிறிலங்கா இராணுவ அணியைப்போல அரசியல் அரங்கில் நிலைபேறு அடைந்து விட்டது. எந்த ஒரு நாட்டிலும் இரண்டுஇராணுவங்கள் இருக்க முடியாது. இலங்கைத் தீவில் தத்தமக்கென தனித்தனி இராணுவங்களை கொண்ட இரு நாடுகள்தான் இப்போது உள்ளது சமாதானத்தை ஏற்ப

எல். எஸ். எஸ் பி. கூடமுன்பு இரு நாடுகள் என்ற கருத்திற்கு சிறிய நாடாகிவிடும் என்று தெரிவித்து எதிர்ப்பு காட்டி வந்தது. இத்தகைய நம்பிக்கை பேணப்படுவதற்கு பாடசாலைகளில் புவியியல் பாடம் சரியாகப் போதிக்கப் படாமை கூட ஒரு காரணமாகும். நெதர்லாந்து கூட இலங்கைத்தீவு அளவுக்கு நிலப்பரப்பை உடையது தான்பெல்ஜியம் மற்றும் லக்ஸ்சம் பர்க் என்னும் இரு நாடுகளின் ஒன்றியமாக அது உள்ளது வடக்கு கிழக்கு தவிர்ந்த சிறிலங்காவின் மக்கட்தொகையும் இதே அளவு தான். எதிர்கால ஈழத்தை விட அளவிலும் மக்கள்தொகையிலும் குறைவான 36 நாடுகள் ஏற்கனவே ஐ. நா சபையில் அங்கம் வகிக்கின்றன.

வெற்றிகொள்ள முடியாததும், நீண்டகால அடிப்படையில் தோல்வியை சந்திக்கக் கூடியதுமான இந்தப் போரையும், அழிவு தரும் கொள்கைகளையும் தொடர்ந்து பேணுவதை விட நாடு சுருங்கிப் போய்விடும், வளம் குன்றிவிடும் என்ற கருத்தை கைவிடுவது மேலானதாகும்.

சுதந்திரத்திற்கு பின்னான 45 வருடகால அசிங்கமான அனுபவங்களிலிருந்து விடுபடுவதற்கு இன்னும் நீண்டகாலம் செல்ல வேண்டியிருந்தாலும் கூட பிரிவினையுடன் கூடிய சமாதானத்தை ஏற்பது நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த உண்மைகள் எமது மக்களுக்கு முன்பாக உரைக்கப்பட வேண்டும்.

காவிரிப் பிரச்சினையை தீர்க்கவில்லை

## மத்திய மாநில அரசுகள் மீது தி. மு. க. குற்றச்சாட்டு

(சென்னை)

காவிரி நதி நீர்ப்பிரச்சினைக்கு தீர்வுகாண மத்திய அரசும், மாநில அரசும் தவறிவிட்டதாக தி. மு கவும் அதனோடு இணைந்துள்ள தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் குற்றம்சாட்டியுள்ளன.

அமுல் படுத்துமாறு கர்நாடக அரசுக்கு நெருக்குதல் கொடுக்காமல் மத்திய அரசு மௌனம் சாதித்ததாகவும், குறுவை சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையிலும் கூட தமிழக அரசு தீவிர நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாஞ்சிலாரின் குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானவை

### கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தி. மு. க பற்றி நாஞ்சில்

பேசிய கருணாநிதி, மேலும் கூறுகையில் நாஞ்சில் மனோக

தார்.

அத்துடன் நாஞ்சில் மனோ

ளன். இதன் அடிப்படையில், எவரும் இலங்கைத் தீவில் இரு தேசங்கள் இருப்பதென்பதைத் தர்க்க பூர்வமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் ஓர் இனத்தின் தாயகத்தின் ஒரு பகுதியை, அதாவது ஒரு தேசத்தின் ஒரு பகுதியை மற்றைய தேசத்தின் இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. ஆனால் அதை மீட்டெடுப்பதற்காக ஒரு தேசத்தின் இராணுவம் சிறியதாக இருப்பினும் ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் போரிடுகின்றது. ஆனால், ஒரு நாட்டின் இராணுவம் மற்றைய தேசத்தை ஆக்கிரமிப்பதென்பதும், அதை மீட்டு தமது சுதந்திர தேசத்தை நிறுவ மக்கள் போராடுவதும், மீட்டெடுப்பதும் வரலாறு கண்ட உண்மை.

பொதுவாக உலகத்தின் வரலாறே ஆக்கிரமிப்பாளர்களின் வரலாறாகவும், வெற்றிபெற்றவர்களின் கதைகளாகவுமே உள்ளன. ஆனால் இவ் ஆக்கிரமிப்பாளர்களின் வெற்றியானது, நீண்ட காலத்திற்கு நீடித்து நிலைத்துவிடமாட்டாது. உலக சர்வாதிகாரிகளினதும், ஏகாதிபத்திகளினதும் வரலாறு இதையே கூறுகிறது. அத்தோடு, ஆக்கிரமிப்பாளர்கள் எப்பொழுதும் நிம்மதியாக தூங்கியதும் கிடையாது.

இந்த வரிசையில்தான் கிழக்கு மாகாணமும் உள்ளது. தமிழர் தாயகமான இப்பகுதி சிங்கள இராணுவத்தால் கணிசமான அளவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமித்த இப்பகுதியில் இனப்படுகொலை மூலம் தனது ஆதிக்கத்தை சிங்கள இராணுவம் நிலை நிறுத்திவிட முற்பட்டு நிற்கின்றது.

ஆனால், உலகின் எப்பகுதியிலும் ஆக்கிரமிப்பு இராணுவம் வெற்றி பெற்றதாக இல்லை. இறுதியாக அவர்கள் என்றோ ஒரு நாள் வெளியேறியே ஆகவேண்டும். ஒரு காலததில் சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என பெருமை பேசிக் கொண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இன்று தனது கொல்லைப் புறமான அயர்லாந்தைக் கூட தக்க வைத்துக் கொள்ளப் பெரும் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. ஆனால், இது எழுதுவது போன்றோ, அன்றி பேசுவது போன்றோ சுலபமானதல்ல. பல்வேறு இழப்புக்கள், துயரங்கள் என்பனவற்றின் பின்பே சாத்தியமாகக் கூடியவை.

இந்நிலையில், நீண்ட ஒரு யுத்தத்தின்பின் தோல்வியா அல்லது சமாதானமா என்பதை சிங்கள அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும். ஏனெனில், யுத்தத்தை ஆரம்பித்தவர்களும் அவர்களே, நடத்திச் செல்பவர்களும் அவர்களே. ஆனால், அவர்கள் சமாதான தீர்வொன்றிற்கு வரவேண்டுமானால் முதலில் அவர்கள் இரு விடயங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒன்று தமிழர் தாயகம், மற்றையது தமிழர்விடுதலைப்போராட்டத்தின் இன்றைய யதார்த்த நிலை. அதாவது, சிங்கள இராணுவத்துடன் போரிடும் ஆற்றல் படைத்ததாக வளர்ந்துவிட்ட தமிழர் இராணுவம். இவை இரண்டையும் தவிர்க்க நினைத்தால் இலங்கையில் அண்மைக் காலத்தில் அமைதியே ஏற்பட வாய்ப்பில்லை.

---

காவிரிப் பிரச்சினையை தீர்க்கவில்லை

## மத்திய மாநில அரசுகள் மீது தி. மு. க. குற்றச்சாட்டு

(சென்னை)

காவிரி நதி நீர்ப்பிரச்சினைக்கு தீர்வுகாண மத்திய அரசும், மாநில அரசும் தவறிவிட்டதாக தி. மு கவும் அதனோடு இணைந்துள்ள தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் குற்றம்சாட்டியுள்ளன.

இது தொடர்பாக அவை சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் காவிரி நதி நீர்ப் பங்கீடு தொடர்பான நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல் படுத்துமாறு கர்நாடக அரசுக்கு நெருக்குதல் கொடுக்காமல் மத்திய அரசு மௌனம் சாதித்ததாகவும், குறுவை சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையிலும் கூட தமிழக அரசு தீவிர நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

அத்துடன் இந்தப்பிரச்சினை தொடர்பாக, விவசாயிகள் நடத்தும் போராட்டங்களுக்கு இக் கட்சிகள் தமது ஆதரவை தெரிவிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியா தனது நலன்களை ஒருபோதும்விட்டுக்கொடாது

### திணேஷ் சிங் கூறுகிறார்

[டில்லி]

இந்தியா தனது நலன்களை ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்றும் பொருளாதார வளர்ச்சிக்காக உள்நாட்டு தொழில் நுட்பங்களை அது ஊக்குவிக்கும் என்றும் வெளியுறவு அமைச்சர் திணேஷ் சிங் கூறியுள்ளார்.

கிரியோ ஜெனிக் என்ஜின் பேர விடயத்தில் அமெரிககாவின் நெருக்குதல் மற்றும் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானைச் சேர்க்காத அமெரிக்காவின் செயல் போன்றவை தொடர்பாக வெளியுறவு அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் கமிட்டி உறுப்பினர்களின் கவலையை பகிர்ந்து கொண்ட அமைச்சர் திணேஷ்சிங் மேலும் கூறுகையில், இந்தியாவுடன் எல்லா முக்கிய விடயங்கள் குறித்தும் பேச்சு நடத்த அமெரிக்கா விரும்புகின்றது ஆனால் முடிவுகள் எடுக்கும் போது அமெரிக்கா தனது சுயநலத்தை விட்டுக்கொடுக்க விரும்புவதில்லை எனவும்தெரிவித்தார்.

இதேவேளை இந்தியாவிற்கு கிரியோஜெனிக் என்ஜின்கள் மற்றும் அதன் தொழில நுட்பம் விற்பனை தொடர்பாக பேரத்தை திருத்தி அமைக்க அல்லது விலக்கிக் கொள்ள ரஷ்யாவிற்கு அமெரிக்கா நெருக்குதல் செய்திருப்பது பற்றி பாரதீய ஜனதாக்கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும் அமெரிக்காவைக் கண்டனம் செய்துள்ளன.

## பாகிஸ்தான் நலன் என்பதே எனக்கு முக்கியமாகும்

### – நவாப் ஷெரீப்

[இஸ்லாமாபாத்]

எல்லாவற்றையும் விட பாகிஸ்தானின் நலன் என்பதே முக்கியம் என்று பாகிஸ்தான் அதிபர் மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் நவாப் ஷெரீப் தெரிவித்தார்.

தேசிய சட்டப் பேரவையை கலைத்துவிட்டு புதிதாக தேர்தல் நடத்துவது பற்றிய கேள்விக்கு பதிலளிப்பதை நாசூக்காக தவிர்த்துக் கொண்ட பிரதமர் நவாப் ஷெரீப், அதிபர் குலாம்இஷாக்கான், இராணுவத்தளபதி ஜெனரல் அப்துல் வாஹித் மற்றும் தான் உட்பட்ட முத்தரப்பு மாநாடு இரண்டரை மணிநேரம் நீடித்ததாகவும் அப்போது பொது உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த முத்தரப்பு சந்திப்பின் மூலம் பாகிஸ்தானில் நிலவிவந்த அரசியல் தேக்க நிலை நீக்கப்பட்டு இருப்பதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

---

# நாஞ்சிலாரின் குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானவை

### கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

தி. மு. க பற்றி நாஞ்சில் மனோகரன் வெளியிட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையாகும் என்று தி. மு. க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

தி. மு. கவின் தலைமையை இளையதலைமுறையிடம்கையளிக்க வேண்டும் எனநாஞ்சில் மனோகரன் கூறியிருப்பது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி, மேலும் கூறுகையில் நாஞ்சில் மனோகரனை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொண்டிருந்தால் அவர் இவ்வாறெல்லாம் கூறியிருக்க மாட்டார் என்றும், சேர்க்காத காரணத்தால் இத்தகைய முரண்பாடுகள் மலிந்த கருத்துக்களை அவர் வெளியிட்டு வருகிறார் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் நாஞ்சில் மனோகரனை மீண்டும் கட்சியில் சேர்ப்பதற்கு தி. மு. கவின் பெரும்பாலான தலைவர்கள் காட்டிய எதிர்ப்பு சரியானது என்பதை நாஞ்சில் மனோகரனின் அறிக்கை தெளிவாக்கி இருப்பதாகவும் கருணாநிதி குறிப்பிட்டார்.

## நிரஞ்சன் ஷா திருப்பி அனுப்பப்பட்டார்

(டில்லி)

அரசு பங்குபத்திர ஊழல், மற்றும் போதை மருந்து கடத்தல் என்பன தொடர்பாக இந்திய பொலிசாரால் தேடப்பட்ட பம்பாய் பங்குத்தரகரான நிரஞ்சன் ஷா என்பவரை ஐக்கிய அரபு எமிரேட் இந்தியாவிற்கு நாடு கடத்தியுள்ளது. அபுதாபியில் விசேட புலனாய்வு பணியகம்(சி. பி ஐ) கூட்டு இயக்குனர் பி சி. சர்மாவிடம் ஒப்படைக்கப்பட்ட நிரஞ்சன்ஷா உடனடியாக இந்தியாவிற்கு விமானம்மூலம் கொண்டுவரப்பட்டார். கடந்த ஒரு வருடகாலமாக அபுதாபியில் வசித்துவந்த நிரஞ்சன்ஷா கடந்த மார்ச் மாதத்தில் அபுதாபி அதிகாரிகளால்கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காங்கிரசின் முயற்சிக்கு தி. மு. க. ஒத்துழைக்க மறுப்பு

### வாழப்பாடி கவலை

(சென்னை)

காவிரி நதி நீர்ப்பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து முறையீடு செய்ய வேண்டும் என்று தான் வெளியிட்ட யோசனையை தி. மு. க நிராகரித்திருப்பது குறித்து தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கவலை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் நிருபர்களிடம் பேசிய வாழப்பாடி இராமமூர்த்தி மேலும் கூறுகையில்:

முக்கியம் வாய்ந்த மக்கள் பிரச்சினையான காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பாக அரசியல் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும் என்று தான் முயற்சிகள் மேற்கொள்வதாகவும், இதில் தி. மு. க ஒத்துழைக்காமலிருப்பது இப் பிரச்சினையில் அதற்கு அக்கறை இல்லை என்பதையே காட்டுகின்றது எனவும் தெரிவித்தார்.

## அமெரிக்காவின் ஏவுகணை ஈராக் வசமானது

[நியூயோர்க்]

அமெரிக்காவின் ஏவுகணையொன்று ஈராக்கிற்கு கிடைத்துள்ளதாக நியூஸ்வீக் சஞ்சிகை கூறுகிறது. கடந்த ஜனவரியில் ஈராக் கைத்தொழிற் பேட்டை ஒன்றின்மீது அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலின் போது வெடிக்காத அதிவேக ஏவுகணையொன்றையே ஈராக் இப்போது தன் வசமாக்கியுள்ளது.

ஈரான் ஸக்ரோஸ் மலைப் பிரதேசத்திற்கு மேலாக ஏவப்படத் திட்டமிடப்பட்ட ஏவுகணைகள் சுமார் 250 மைல்களை கடந்து பின் பக்தாத் டியாலா ஆற்றோரமாகத்தென் மேல் பகுதியை அடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

## பி. ஜே. பி. - காங்கிரஸ் மோதல் நிலையில்

அடுத்த தேர்தலில் போட்டியிட முடியாமல் பாரதீய ஜனதாவை தடைசெய்ய நரசிம்மராவ் அரசு முயற்சித்து வருவதாக வாஜ்பாய் தெரிவித்துள்ளார். தேர்தலில் போட்டியிட பி. ஜே. பிக்கு தடைவிதிக்கப்பட்டால் நரசிம்மராவ் தனது ஆட்சியில் தொடர்ந்து இருக்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதே வேளை பங்குத்தரகர் ஹர்சத்மேத்தா தலைமையில் பி. ஜே. பி. ஊழல் ஒழிப்பு போராட்டம் நடத்தப்போகின்றதா என காங்கிரஸ் கட்சி கேட்டுள்ளது. பி. ஜே பி. முஸ்லிம்களுக்கு எதிரானது என்றும் உயர் ஜாதி இந்துக்களின் கூடாரம் என்றும் பி. ஜே. பியை காங்கிரஸ் கண்டித்துள்ளது. பி. ஜே. பியை வீழ்த்த வியூகம் தயாராகிவிட்டது என காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் கூறினார்

# லலித் கொலைகுறித்து விசாரணைக்குழு தேவை

## காமினி கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முன்னாள் தலைவர் லலித் அத்துலத்முதலியின் கொலை தொடர்பாக சுதந்திரமான விசாரணைக் குழுவொன்றை நிறுவுமாறு அக் கட்சியின் தலைவர் காமினி திஸாநாயக்கா கோரியுள்ளார். கட்சியின் பொதுச் செயலாளர் ஜி.எம். பிரேமச்சந்திரா இதனைத் தெரிவித்தார்.

ஆணைக்குழு நிறுவும்படியான வேண்டுகோள், அரசிடம் காமினி திஸாநாயக்கா முன்வைக்கும் முதற் கோரிக்கை என்றும், இதற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா 'உயர் முக்கியத்துவம்' வழங்குவார் என்று தான் நம்புவதாகவும் பொதுச் செயலாளர் ஜி.எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

காமினி திஸாநாயக்காவின் கோரிக்கைக்கு இணங்கி ஜனாதிபதி சுதந்திர விசாரணைக் குழு ஒன்றை நிறுவுவது பற்றி ஆலோசித்து வருவதாகவும், புலனாய்வுப் பிரிவு அதன் அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு, இந்த விசாரணைக் குழுவை ஜனாதிபதி நியமிக்கவுள்ளார் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விசாரணைக் குழுவை நியமிக்கும்வகையில்லலித்கொலை தொடர்பான விசாரணையை விரைவுபடுத்துமாறு புலனாய்வுப் பிரிவுக்குப் பணித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாசா பத்திரிகையாளர் றிச்செட்டி சொய்சா. முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண, கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோ மற்றும் முக்கிய பிரமுகர்கள் தொடர்பான கொலைகள் பற்றி விசாரிக்க ஆணைக் குழுக்கள் நிறுவுமாறு தாம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளதாகவும் பிரேமச்சந்திரா மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப்போர் வரலாற்றை ஆவணப்படுத்தவேண்டும்

(மன்னார்

மண்ணின் விடிவிற்காக எமது போராளிகள் தமது உயிர்களை எப்படியெல்லாம் அர்ப்பணித்தார்கள், எம் மண்ணை ஆக்கிரமித்த சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம்களை நாம் எப்படித் தாக்கி அழித்தோம், என்பன போன்ற எமது விடுதலைப் போராட்டத்தின் வரலாறுகளையும் எமது சந்ததியினருக்கு எடுத்துவைக்கவேண்டுமானால் அதை எழுதி ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு காட்டவேண்டிய பொறுப்பு எமது கலைஞர்களின் கையிலேயே உள்ளது.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சியின்போது கலந்து கொண்ட கலைஞர்கள் மத்தியில் மன்னார் மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் நந்தகுமார் (டென்சில்) உரையாற்றும்போது தெரிவித்தார்.

கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் மன்னார் மாவட்ட தளபதி கதிர் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் சசி மங்களவிளக்கேற்றி வைத்தார்.

இதை தொடர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலியுடன் மேற்படி நிகழ்வு ஆரம்பமானது. இதன்முடிவில் இது எங்கள் தேசம், தாயகக் கனவு ஆகிய வீடியோ படங்கள் காண்பிக்கப்பட்டன.

# மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன:

01. வீ. வே. பகிர்தா சிவநந்தினி சின்னத்தம்பி ஏழாலை
02. வீ. வே ஆனந்த் கிருஷ்ணபிள்ளை தவராசா கரவெட்டி
03. வீ. வே. ஆனந்தன் நேசா அமலதாஸ் சுண்டிக்குளி
04. வீ. வே. பாரத் இராசதுரை குணதாசன் உடுவில்,
05. மேஜர் சுரேஸ் கணேஸ் புலேந்திரன் தாளையடி
06. வீ. வே. டிலக்ஸ் சின்னையா இராசேந்திரன் கிளிநொச்சி
07. மேஜர் நகுலேஸ்வரன் சிங்காரவடிவேல் தவக்குமார் வல்வெட்டித்துறை
08. வீ. வே. யாழன் செல்லையா ரவி வவுனியா
09. 2 ம் லெப். குமுதன் வைத்திலிங்கம் தயாளன் நீர்வேலி
10. வீ. வே. பப்பா செல்வம் கணேஸ் யாழ்ப்பாணம்
11, 2-ம் லெப். வாசு கறுப்பையாமாணிக்கம் வவுனியா
12. 2-ம் லெப். மதிவாணன் ஐயாத்துரை சபேசன் கரவெட்டி
13. கப்டன் வானதி பத்மசோதி சண்முகநாதபிள்ளை நயினாதீவு
14 லெப். மணிவண்ணன் மேரியோசப் பிரான்சிஸ் சேவியர் மன்னார்
15 வீ. வே. பிலிப்ஸ் செபஸ்ரியன் ரெக்சன் குருநகர்,
16 வீ. வே. வரன் சரவணமுத்து ரவிச்சந்திரன் யாழ்.
17. 2-ம் லெப். தேவா அற்புதநாதன் குகதாஸ் ஏழாலை
18. மேஜர் கேசரி பாலகிருஷ்ணன் அரசகேசரி பருத்தித்துறை
19. வீ. வே யசோ சுஜித்தா சிவஞானம் தொண்டமானாறு
20. வீ. வே. சுரேஸ் சுப்பிரமணியம் இலங்கேஸ்வரன் கொட்டடி யாழ்.
21. வீ. வே நாகேஸ்வரி பிரபாவதி சந்தான் மன்னார்
22. வீ. வே கரிகாலன் மாப்பாணர் உதயகுமார் ஆவரங்கால்
23. வீ. வே. சிவநாதன் செல்லத்துரை ஜெபராஜ் கொக்குவில்
24. லெப். நித்தி கிருஷ்ணபிள்ளை தவரத்தினம் கொடிகாமம்
25. லெப். ரொபின்சன் திருமேனிப்பிள்ளை கிருபாகரன் கொக்கட்டிச்சோலை
26. வீ. வே. தர்சினி ரஞ்சினி அருளம்பலம் கிளிநொச்சி,
27. வீ. வே. நியூட்டன் குமாரசாமி சிவகுமார் நாவற்குழி, கைதடி
28. லெப். மாக்கிரட் சாந்தி சிற்றம்பலம் தாளையடி.

1991ஆம் ஆண்டில் ஆ. க. வெ. நடவடிக்கையின் போது ஆனையிறவு பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களயாக்கிக் கொண்ட மேல்வரும் மாவீரர்களின் போஸ்ரர்படங்களை சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

# ஒட்டமாவடி முஸ்லிம்கள் அஷ்ரப்பிற்கு கறுப்புக்கொடி

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் கடந்த ஞாயிறன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பேசிக்கொண்டிருந்தபோது கூட்டத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. இதையடுத்து கூட்டம் இடைநிறுத்தப்பட்டது மக்கள் சிதறி ஓடினர்.

இதேசமயம் காத்தான்குடி மெயின் வீதி பஸ்நிலையம் அருகே அன்று காலை குண்டு ஒன்று வெடித்தது. இதனை அடுத்து கடைகள் இழுத்து மூடப்பட்டன. ஓட்டமாவடியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் விஜயம் செய்வார் என ஒலிபெருக்கியில் அறிவித்தவாறு சென்ற வாகனம் அப்பகுதி முஸ்லிம்களால் தாக்கி நொருக்கப்பட்டது. அஷ்ரப் சென்ற பகுதி எங்கும் பள்ளிவாசல் கதவுகள் மூடப்பட்டதுடன் வீதிகளில் கறுப்புக்கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

# ஆகஸ்ட் மாதத்தில் ஹேமா அரசியல் பிரவேசம்

## ரட்ணசிறி ராஜபக்ச தகவல்

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதமளவில் திருமதி ஹேமா பிரேமதாசா கட்சிக்குள் பணிபுரிவதற்கான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார் என கொழும்பு மேயர் ரட்ணசிறி ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். அவர் கட்சிக்கும் நாட்டுக்கும் பணிசெய்ய எந்தத் தடையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

திருமதி ஹேமா ஏற்கனவே கூறியபடி கட்சியில் பாரிய சேவை செய்து நாட்டிற்கும் கட்சிக்கும் பங்களிப்புகளை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்றும் கொழும்பு மேயர் மேலும் தெரிவித்தார்.

திருமதி பிரேமதாசாவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவரும் முயற்சியில் தீவிரமாக இருப்பவர்களில் ரட்ணசிறி ராஜபக்ஸவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தனது எதிர்காலம் குறித்து அநுரா இன்று முடிவு?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ள அநுரா பண்டாரநாயக்கா தனது எதிர்கால முக்கிய அரசியல் முடிவை இன்று எடுக்கலாம் என அரச கட்டுப்பாட்டிலுள்ள ஆங்கில தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தனியாக ஒரு கட்சியை அமைத்து தற்போதைய அரசுக்கு அவர் ஒத்துழைப்பு வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இது குறித்து அநுரா சுதந்திரக்கட்சியில் உள்ள தனது ஆதரவாளர்களை இன்று சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# காலிறுதிப் போட்டிகள்

யாழ். மாவட்ட வலைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான காலிறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்திலும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

வலைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் முதலிடம் பெறும் அணிகளில் 17 வயது பிரிவு அணிக்கு கப்டன் வானதி ஞாபகார்த்த சுற்றுக்கேடயமும்,

19 வயது பிரிவு அணிக்கு மேஜர் பாரதி ஞாபகார்த்த சுற்றுக்கேடயமும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வழங்கப்படவுள்ளது.

ஜெயலலிதா

டம் இது என அவர் கூறினார்.

இதேசமயம் ஜெயலலிதா உண்ணா விரதம் இருப்பதை காவிரி நதி நீரை பெறும் தஞ்சை மாவட்ட விவசாயிகள் வரவேற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின்

பெர்னாண்டோ காலிமுகத்திடலுக்கு அருகாமையில் கொல்லப்பட்டார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுபவர்கள் குறித்து அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும் படி பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

மாட்டிறைச்சியில்

மற்றவர்களுக்குச் சொறி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாக். பிரதமர் ராஜினாமா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதம மந்திரி நவாப் ஷரிப் தமது பதவியை நேற்றிரவு ராஜினாமாச் செய்தார்.

வானொலிமற்றும் தொலைக்காட்சியில் நாட்டுமக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நவாப் ஷரிப் தமது ராஜினாமாவை அறிவித்தார்.

புதியபொது தேர்தல் இடம் பெறஉள்ளதாக அறிவித்த அவர் அதற்கான திகதியை அறிவிக்கவில்லை.

ஜனாதிபதி குலாம் இஸாக் கானும் தனது பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளார்.

தமிழக

மத்திய அரசைக் கண்டித்து கோஷங்களும் எழுப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது இதனைத் தொடர்ந்து பொலிசாரின் ரோந்து நட

மினுமினுத்த

தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். வீரச்சாவடைந்த கப்டன் உதயபாலன் (கந்தசாமி உதயகுமார் குமார ஆலய வீதி கிரான் மட்டக்களப்பு). வீரவேங்கை பார்த்தீபராஜன் (கணேசன் யுகதீஸ்வரன் வாக்கிரிசாவீதி திருக்கோவில் அம்பாறை) எனும் இரண்டு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

புதிய

பாராளுமன்ற குழு கூட்டத்தில் அண்மையில் ஆராயப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

தமிழக ஆளுநர் சென்னாரெட்டி தமது பயணத்தை ரத்து செய்து சென்னை திரும்பியுள்ளார். ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் குறித்து ஆளுநர் ஆழ்ந்த கவலை வெளி


கட்டைவேலி – நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

**சேமிப்புக் கணக்கு மீதியை உறுதிப்படுத்தல்**

எமது சங்கத்தின் கிராமிய வங்கியிலும், சங்கத்திலும் வைப்புக் கணக்குகள் வைத்து வருகின்றவர்கள், தங்களது பற்று வரவுப் புத்தகங்களை 23-07-1993, 24-07-1993 ஆகிய தினங்களில் சங்கத்தில் சமர்ப்பித்து மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். தவறின், சங்கப் புத்தகங்களின் மீதிகளே சரியென ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

கரவெட்டி,
14-07-1993

பொ. சிற்றம்பலம்,
பொதுமுகாமையாளர்.

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

சியல் முடிவை இன்று எடுக கலாம் என அரச கட்டுப்பாட் டிலுள்ள ஆங்கில தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது.

அநுரா சு தந்திரக்கட்சியில் உள்ள தனது ஆதரவாளர் களை இன்று சந்தித்துப் பேச வுள்ளதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# கால்இறுதிப் போட்டிகள்

யாழ். மாவட்ட வலைபந் தாட்ட சுற்றுப்போட்டிக்கான காலிறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மைதானத் திலும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

வலைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் முதலிடம் பெறும் அணிகளில் 17 வயது பிரிவு அணிக்கு கப்டன் வானதி ஞாபகார்த்த சுற்றுக்கேடயமும்,

19 வயது பிரிவு அணிக்கு மேஜர் பாரதி ஞாபகார்த்த சுற்றுக்கேடயமும் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் வழங்கப்பட வுள்ளது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 18-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10490

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28 6983 41-9211 27-5907 26-1741 43-2666 28 8229 41-8449 27-8125 24-5170 27-9365 26-9145 27-5863 27-6769 40-2829 41-8467

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-3528 28-6623 26-3638 26-7217 27-4630 24-3063 28-2212 27-6024 42-1293 24-5015 26-8497 28-1085 26-2786 27-1122 24-5964 24-4854 27-5822 24-6855 28-7261

## மரண அறிவித்தல்

## திரு. பாக்கியநாதர் மரியராஜா

வசாவிளானை பிறப்பிடமாகக் கொண்டவரும் சிறுவிளானை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது ஏழாலை தெற்கு மயிலங்காட்டில் (மேல்வீடு) வசித்தவருமான பா. மரியராஜா 18-7-93 இல் காலமாகிவிட்டார். இவர் செல்வராணியின் அன்புக்கணவரும் அன்சி, யோயின்சன், துசான் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியநாதர் எலிசபேத் ஆகியோரின் அன்பு மகனும், பற்றிக் ஆனந்தராசா, அல்பிரட் யோசேப், ஞானமலர், மறாஸ் புனிதமலர், சகாயராசா, யோண் பொஸ்கோ, சொர்ணமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்னையா சுவாமிபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 19-7-93 திங்கட்கிழமை (இன்று) பிற்பகல் 2மணியளவில் இறுதிக்கிரியைகளுக்காக டனித இசிதோர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி

திருமதி அ. அந்தோனிமுத்து (தவமணி ரீச்சர்)
கிரேசர் வீதி (மேல்வீடு),
மயிலங்காடு.
ஏழாலை தெற்கு, ஏழாலை. [5412]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளின்

பெர்னாண்டோ காலிமுகத் திடலுக்கு அருகாமையில் கொல்லப்பட்டார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுபவர்கள் குறித்து அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும் படி பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

### மாட்டிறைச்சியில்

மற்றவர்களுக்குச் சொறி ஏற்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கறிசமைக்கும் போது உள்ள சாதாரண வெப்பத்தை இக் கிருமிகள் தாக்குப் பிடிக்கக் கூடியவை எனவும் தெரிவிக் கப்படுகிறது.

கொழும்பில் அண்மையில் கைப்பற்றப்பட்ட நோய்க் கிருமியுள்ள 600 கிலோகிராம் மாட்டிறைச்சி, மிருகக்காட்சி சாலைக்கு மிருகங்களின் உணவுக்குக் கூட வழமைப் பிரகாரம் அனுப்பப்படாமல் அழிக்கப்பட்டன என்று திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பொலநறுவை

யோகநாதர்கள், முதலான பலரும் கடத்தப்பட்டவர்களில் அடங்குவர்.

கடந்த வாரம் மட்டும் ஆசிரியர் பத்மநாதன், செல்வந்தரான சோதிநாதன் ஆகியோர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். மன்னம்பிட்டி அரசாங்க வைத்தியசாலை டாக்டர் சிவராசா, ஒன்பது பிள்ளைகளின் தந்தையும் பாடசாலை அதிபருமான கணபதி (53 வயது) அதிபர் ஆனந்தராஜா (45). ஆசிரியர் திருச்செல்வம் (27), தங்கராஜா (28) ஆகியோர் ஏற்கனவே கடத்திச் செல்லப் பட்டுள்ளனர்.

சீருடையிலும் சிவிலுடையிலும் வந்தே இக் கடத்தல்கள் இடம் பெறுகின்றன.

### விரைந்து

தாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடற்படைக்குச் சொந்தமான சீனா, தென்கொரியா, இஸ்ரேல் பீரங்கிப் படகுகளுடன் ஏவ். ஏ. சி. படகுகளும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

கடலோர ரோந்துப் படகுகள் உட்பட பன்னிரண்டு படகுகளை இதுவரை கொழும்பு ட்றை டொக் சிறிலங்கா கடற்படைக்கு விநியோகித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வானொலிமற்றும் தொலைக்காட்சியில் நாட்டுமக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நவாப் ஷரிப் தமது ராஜினாமாவை அறிவித்தார்.

புதியபொது தேர்தல் இடம் பெறஉள்ளதாக அறிவித்த அவர் அதற்கான திகதியை அறிவிக்கவில்லை.

ஜனாதிபதி குலாம் இஸாக் கானும் தனது பதவியை ராஜினாமாச் செய்யவுள்ளார்.

(கணேசன் யுகதீஸ்வரன் வாக் கிரிசாவீதி திருக்கோவில் அம்பாறை) எனும் இரண்டு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### புதிய

பாராளுமன்ற குழு கூட்டத்தில் அண்மையில் ஆராயப் பட்டதாகவும் தெரிய வருகின்றது.

### தமிழக

மத்திய அரசைக் கண்டித்து கோஷங்களும் எழுப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது இதனைத் தொடர்ந்து பொலிசாரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

ஜெயலலிதா உண்ணாவிரதம் இருக்கும் செய்தி கேட்டு பாண்டிச்சேரி சென்றிருந்த தமிழக ஆளுநர் சென்னாரெட்டி தமது பயணத்தை ரத்து செய்து சென்னை திரும்பியுள்ளார். ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் குறித்து ஆளுநர் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார். காவிரி பிரச்சினை குறித்து பிரதமருடன் தொடர்புகொண்டு அனைத்து முயற்சிகளையும் தாம் மேற்கொள்ளவுள்ளதாக சென்னாரெட்டி கூறியுள்ளார்.

### மக்கள்

அவர் மேலும் கூறுகையில்; இந்த நீதிமன்றங்களில் நீதியாளராக இருக்கப் போகின்றவர்கள் எமது போராளிகள். இவர்கள் உலக சட்டங்கள் எல்லாவற்றையும், முழுமையாகக் கற்று, அறிவில், வயதில் முதிர்ந்த அனுபவமுற்றவர்கள் என்று நாம் கூறவரவில்லை ஆனால் குடும்பம், சுற்றம் என்றவட்டத்திலிருந்து வெளியே வந்து இந்த மக்களையும் மண்ணையும் நேசித்து அதற்காக தங்களையே அர்ப்பணிக்க முன்வந்தவர்கள். இந்த மண்ணையும், மக்களையும் காட்டிக் கொடுக்க, அழிக்க, அடிமையாக்குவதற்கு முனைந்தவர்கள் அண்ணனாக இருந்தாலும், தம்பியாகஇருந்தாலும் தண்டிக்கத் தயங்காது செயற்படும் வகையில் வளர்க்கப்பட்டவர்கள். எம் மக்களுக்கு நீதியான முறையில், பாகுபாடற்ற முறையில் நீதி வழங்க முற்படுவார்கள். ''இந்த வழியில் செல்வதற்கு நீங்கள் குறுக்கே நிற்க மாட்டீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்றார்.

நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா தலைமையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் திரு. பரா கருத்துத் தெரிவிக்கையில்; ''தமிழீழத்திற்கான தனியான நீதிநிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எமது மக்களின் பண்பாடு, தேசிய தன்மைக்கேற்ற வகையில் எங்களுக்குரிய சட்டங்களையும் நாங்களே உருவாக்க வேண்டும். மக்களுக்கு சமமான நீதி கிடைக்கவும் ஒரு நிரபராதி தண்டிக்கப்படாமல் இருக்கவும் ஏற்ற வகையில் எமது நீதிமன்றங்களை அமைக்க முயல்கிறோம்.

''எம்மால் அமைக்கப்பட விருக்கும் நீதிமன்றங்களில் மக்களின் சார்பில் ஆஜராகிக் கருத்துக்கள் கூற அனுமதி அளித்திருக்கின்றோம். ஆனால் சட்டவாதங்கள் மூலமோ, வாதத்திறமையின் மூலமோ ஒரு குற்றவாளி தப்பிக் கொள்ளாத வகையில் நீங்கள் செயற்படுவீர்கள் என நாம் எதிர்பார்க்கிறோம்'' என்றார்.

தொடர்ந்து காவல்துறைப் பொறுப்பாளர் கருத்துக் கூறுகையில் ''நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். அமையப்போகும் தமிழீழத்திற்கான அடி அத்திவாரங்களைப் போடும் முகமாகவே காவல்துறை, நீதித்துறைஇப்படிப்பல துறைகளை இப்போதிருந்தே உருவாக்கிக் கொண்டு வருகிறோம். ஒவ்வொரு நாடுகளிலும் இத்துறை சார்ந்த அமைப்புகள் 100, 200 வருட பழமைவாய்ந்த அனுபவமுடையதாக உள்ளன. ஆனால் நாம் ஆரம்பித்து ஒரிரு வருடங்களே ஆகின்றன. இக்கால கட்டத்தில் பல பிரச்சினைகள் ஏற்படும். எமது வளர்ச்சியின் மூலம் தான் இதனை நிவர்த்தி செய்ய முடியும். இந்த அடிப்படையில் இத்துறைகளை வளர்க்க மேலதிக ஒத்துழைப்புகளையும் நீங்கள் நல்க வேண்டும்'' என்றார்.

இக்கலந்துரையாடலில்கேட்கப்பட்ட வினாக்களுக்கு நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா அவர்களால் பதில் கூறப் பட்டது.

கட்டைவேலி – நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## சேமிப்புக் கணக்கு மீதியை உறுதிப்படுத்தல்

எமது சங்கத்தின் கிராமிய வங்கியிலும், சங்கத்திலும் வைப்புக் கணக்குகள் வைத்து வருகின்றவர்கள், தங்களது பற்று வரவுப் புத்தகங்களை 23-07-1993, 24-07-1993 ஆகிய தினங்களில் சங்கத்தில் சமர்ப்பித்து மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். தவறின், சங்கப் புத்தகங்களின் மீதிகளே சரியென ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

கரவெட்டி,
14-07-1993

பொ. சிற்றம்பலம்,
பொதுமுகாமையாளர்.

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்
[சி-7022]

எங்கள் செந்நீரைக் கண்ணீராக்கும்

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



பெற்ற அன்னையின்
மடியில்

27-12-1969

தமிழீழ மண்ணின்
மடியில்

22-07-1990

## வீரவேங்கை முத்து

(தெய்வேந்திரம் மகேந்திரன்)

அல்வின் வீதி, காரைநகர்

திதி:-19 07-1993

மண்ணின் விடியலை மனதிலே பதித்து
விடுதலைக் களத்திலே வீரனாய் குதித்தாய்
விடுதலைத் துவக்கோடு றவைகளை ஏந்தி
முத்து நீ முரசுமோட்டை மண்ணிலே
எதிரி படையினை அழித்தாய்
முத்து நீ உயிரூட்டிய எம் விடுதலைப்போர்
உன உணர்வோடு இன்றும் பலரை உள்வாங்கிக்
கொண்டிருக்கிறது
நீ மாவீரனாகி உன் பாதம் பதிந்த
விடுதலைப் பக்கங்கள் வரலாறாகி எம் கரங்களில்
படிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன.
எங்களின் தேசத்திற்காக இன்னுயிரை ஈந்த
மாவீரனே மான மறவனே
இந்த நாளிலே நினைவு கூருகின்றோம்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(5413)

குடும்பத்தினர்
உறவினர்
நண்பர்கள்.